# பத்திரிக்கை செய்தி

அரியலூர் மாவட்டத்தில் 9 மாதம் முதல்15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி கடந்த 06.02.2017 முதல் 28.02.2017 வரை 1,06,000 குழந்தைகளுக்கு தடுப்பூசி சிறப்பு முகாம்கள் மூலம் பயன்பெற்றுள்ளனர். இம்முகாமில் விடுப்பட்ட குழந்தைகள் பயன்பெறும் வகையில் தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி வழங்கும் முகாம் தமிழக அரசு மார்ச்-1-ம் தேதி முதல் மார்ச்-15 வரை (15.03.2017) வரை நீட்டித்துள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 1,75,701 குழந்தைகளுக்கு தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் இதுவரை 1,06,000 குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. விடுப்பட்டவர்கள் உடனடியாக நீட்டிக்கப்பட்டுள்ள இந்த அரிய வாய்ப்பினை படுத்தி 15.03.2017-தேதிக்குள் இத்தடுப்பூசி பெற்று பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி அனைத்து ஆரம்ப சுகாதார நிலைங்கள், அரசு மருத்துவமனைகள், துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 15.03.2017 வரை வழங்கப்படும்.

அரியலூர் மாவட்டத்தில் தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி 1296 மையங்கள் மற்றும் 5 நடமாடும் மருத்துவக்குழுவின் மூலம் அளிக்கப்படுகிறது. இப்பணிகளில் 836 மருத்துவப் பணியாளர்கள் 2592 தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது. அரசால் இத்தடுப்பூசி குளிர்பதன தொடர் சங்கிலி முறையில் பாதுகாக்கப்பட்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஒரே தடுப்பூசியில் தட்டம்மை, ரூபெல்லா ஆகிய இருநோய்களை தடுக்கப்படுகிறது. எதிர்காலத்தில் பிறவி ஊனத்துடன் குழந்தைகள் பிறப்பதையும் தவிர்க்கப்படுகிறது

9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஒரே சமயத்தில் இந்த தடுப்பூசி அளிக்கும் போது போலியோவை போன்று தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய்களையும் முற்றிலுமாக ஒழிக்க முடியும். எனவே, இதுவரை தடுப்பூசி வழங்கப்படாத குழந்தைகளுக்கு **மார்ச்-1 முதல்** வழங்கப்படவுள்ள சிறப்பு முகாம்களில் தயங்காமல் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசி அளித்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.